**Page No.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.216/**2024**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW5
Defendant :
Court :

Name : தர்மேந்திரன் – சிறப்பு சார்பு ஆய்வாளர்
Father' s Name : அழகுமலை
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

07.07.2026 CC No.216/2024 அ.சா.5 தர்மேந்திரன் – சிறப்பு சார்பு ஆய்வாளர்

(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது பூவந்தி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் சார்பு ஆய்வாளர் திரு. கலைச்செல்வன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி. உமாதேவி ஆகியோர்களை எனக்கு தெரியும். சார்பு ஆய்வாளர் திரு. கலைச்செல்வன் பணி ஓய்வு பெற்று வேறு மாவட்டத்தில் குடியிருந்து வருவதாலும் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி. உமாதேவி பணி மாறுதல் பெற்று தற்போது வேறு மாவட்டத்தில் பணி செய்து வருவதாலும் வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அவர்களுக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி சாட்சியம் அளிக்கிறேன். மேலும் இந்த வழக்கு ஆவணங்களை நான் பராமரித்து வரும் வகையில் அவர்களது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.

2) கடந்த 02.10.2019 ஆம் தேதி 16.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.07 13:48:25 +0530

கலைச்செல்வன் என்பவர் பூவந்தி காவல் நிலைய நிலையபொறுப்பிலிருந்தபோது செம்பூர் காலனியைச் சேர்ந்த காளிமுத்து மனைவி ஆனந்தவள்ளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 101/2019 பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கை நீதிமன்றத்திற்கும், பிறநகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

3) அதன் பின்பு இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் திரு. கலைச்செல்வன் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் மாலை 05.00 மணிக்கு சாட்சிகள் காளிமுத்து, வன்னிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்னர் பட்டியல் சாட்சிகள் ஆனந்தவள்ளி, பெரியசாமி, கருப்பன், கருப்பையா, காட்டுராஜா மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனிதனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். அதன் பின்பு 03.10.2019 ம் தேதியன்று சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து காலை 08.00 – 10.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன காளி என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்து காவல் ஆய்வாளர் தயார் செய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) அதன் பின்பு சார்பு ஆய்வாளர் காளி என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை தலைமைக் காவலர் முத்துக்குமார் 1583 மூலம் கொடுத்து அனுப்பியுள்ளார். அதன் பின்பு இந்த வழக்கினை காவல் ஆய்வாளர் திருமதி.உமாதேவி தனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரி வடிவேலன் என்பவரை 04.10.2019 ம் தேதியன்று 16.00 மணியளவில் பூவந்தி காவல் நிலையம் முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6) பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 64 H 7105 என்ற பதிவெண்கொண்ட டாடா ஏசி வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.07 13:48:32 +0530

உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பிரபாகரன், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **(மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக எதிரி தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்படுகிறது)** மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் விபத்து ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார்.

7) விபத்தில் இறந்துபோன காளி என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.செந்தில்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார் **(பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.7 ஆக எதிரி தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்படுகிறது)** பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட Death is due to Shock and Haemorrhage as a result of Multiple Injuries Sustained என சான்று வழங்கியுள்ளார். பின்னர் இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்சம் அடையாளம் காட்டிய காவலர் தலைமைக்காவலர் முத்துக்குமார் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. கலைச்செல்வன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 279, 304 (A) இதசவின் கீழ் 25.10.2019–ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்துமே வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**.

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.07.07 13:48:39 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.